# முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
## முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,
## முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
## எம்.சி.ஓ.பி. எண். 349/2019

2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22ம் நாள் புதன்கிழமை. இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10வது விதி 4ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சந்திரசேகர், இளவர். சுஷாந்தின் காப்பாளர் | | |
| த/பெ. | நாகன் | வட்டம் | கும்மிடிப்பூண்டி |
| கிராமம் | முத்தியால்ரெட்டிகண்டிகை | வயது | 38 |
| தொழில் | எலக்ட்ரிசியன் | மாவட்டம் | திருவள்ளூர் |

**முதல் விசாரணை**

1. நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தையும் நான் நன்கு அறிவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை நான் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தாயரிக்கப்பட்டது அந்த விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடைய தான். ம.சா.ஆ 1 முதல் 8 வரை எனது தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்யதுள்ளேன்.

**<u>மனுதாரர் தரப்பு சான்று ஆவணங்கள்</u>**

| | |
|---|---|
| ம.சா.ஆ 1 | முதல் தகவல் அறிக்கை நகல் |

| | |
|---|---|
| ம.சா.ஆ 2 | விபத்து பதிவேடு நகல் |
| ம.சா.ஆ 3 | காயச் சான்றிதழ் நகல் |
| ம.சா.ஆ 4 | மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கை நகல் |
| ம.சா.ஆ 5 | காப்பீட்டு சான்றிதழ் நகல் |
| ம.சா.ஆ 6 | இறுதி அறிக்கை நகல் |
| ம.சா.ஆ 7 | மருத்துவமனை விடுவிப்பு சுருக்கம் அசல் |
| ம.சா.ஆ 8 | மருத்துவ செலவு ரசீது அசல் |
| நி.ம.சா.ஆ.1 | மனுதாரரின் ஊனச் சான்றிதழ் அசல் |

**குறுக்கு விசாரணை.**

இந்த மனுவை எனது பாதுவாகலர் என்ற முறையில் தாக்கல் செய்தேன். 20.03.2017 காலை 11.30 மணிக்கு முத்தயால்ரெட்டிகண்டிகையில் எனது மகன் சாலையோரம் நின்றுக்கொண்டிருந்த போது எதிரே வந்த இரு சக்கர வாகனம் எனது மகனின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. இரு சக்கர வாகனத்தின் பதிவு எண்ணை நான் பார்க்கவில்லை. ஆரம்பாக்கம் மதன் ஜோஸப் மருத்துவமனையில் எனது மகனுக்கு முதலுதவி சிகிச்சை வழங்கினோம். அதன் பிறகு சென்னை பீபில் மருத்துவமனையில் 21.03.2017 ல் மேல் சிகிச்சை அளித்தோம். அங்கு 3 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். அங்கு எனது மகனின் வலது முழங்காலில் முட்டிக்கு கீழ் அறுவை சிகிச்சை செய்து பிளேட் பொருத்தியுள்ளார்கள். அந்த பிளேட் தற்போதும் எனது மகனின் காலில்தான் உள்ளது. விபத்து குறித்து எனது மாமனார் புகார் கொடுத்தார். 4 நாட்கள் காலத்தாமதம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். உடனடியாக மருத்துமனைக்கு சென்றதால் காலத்தாமதம் ஏற்பட்டது. விபத்து குறித்து வேறு நீதிமன்றத்தில் சாட்சியம்

அளிக்கவில்லை. விபத்து சமயத்தில் எனது மகனுக்கு 3 வயது. எல்.கே.ஜி படித்துக்கொண்டிருந்தார். தற்போது எனது மகன் 7ம் வகுப்பு படிக்கிறார். எனது மகனின் கவனக்குறைவாலும் நான் எனது மகனை சரியாக பராமரிக்காததாலும் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க வேண்டியது இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி